## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

**அ.வ.எண்.** 12/2020

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு அக்டோபர் மாதம் 28 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : லோகநாதன் | மதம் | : இந்து |
| த/பெ | : சீனிவாச நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 59 | கிராமம் | : புஜ்ஜிரெட்டிபள்ளி |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

28.10.2024

**வா.சா.2 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. நான் யார் அழைத்து சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் துளசி அழைத்து சாட்சி சொல்ல வந்துள்ளேன். நான் பிறந்து வளர்ந்தது எங்கு என்றால் புஜ்ஜிரெட்டிபள்ளிதான். வழக்கு புல எண்.125/47 ஆகும். வழக்கு சொத்திற்கும் என் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் 3 தெரு தள்ளி உள்ளது. வழக்கு சொத்து தெருவின் பெயர் என்ன என்றால் தோப்பு தெரு ஆகும். எனக்கு பிரதிவாதி வெங்கடேசன், ராதாவை தெரியுமா என்றால் தெரியும். வெங்கடேசனின் அப்பா தெரியும். தாத்தா, பாட்டி தெரியாது.

2. வெங்கடேசனின் பூர்வீகம் புஜ்ஜிரெட்டிபள்ளிதான். வெங்கடேசன் பிறந்து வளர்ந்தது தோப்பு தெரு என்றால் சரிதான். அன்னியப்ப முதலியை தெரியுமா என்றால் தெரியாது. செல்லக்குட்டி முதலியார், அவரது மகன் ஏகாம்பர முதலியாரை தெரியுமா என்றால் தெரியாது. வாதி துளசி சொத்தை வாங்கியதாக சொல்லியிருப்பதில் அப்போது நான் பத்திர பதிவு அலுவலகத்தில் இருந்தேனா என்றால் ஆமாம். பத்திரத்தில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேனா என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 1 ல் உள்ள சாட்சி கையெழுத்துகளில் என் கையெழுத்து இல்லை என்றால் சரிதான். நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சாட்சி கையெழுத்து போட்டேன்.

3. ஜெயராம் முதலியார், பிள்ளையார் முதலியார் ஆகியோர் அதே தோப்பு

தெருவில் வசிக்கிறார் என்றால் சரிதான். ஜெயராம் முதலியார், பிள்ளையார் முதலியார் மத்தியஸ்தம் செய்த போது நான் அந்த இடத்தில் இல்லை என்றால் இருந்தேன். ஜெயராம் முதலியார், பிள்ளையார் முதலியார் மத்தியஸ்தம் செய்த போது நான் அந்த இடத்தில் இருந்ததாக எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் நான் சாட்சி சொல்ல வந்துவிட்டதால் நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை. புல எண்.125/47 பி எங்கு உள்ளது என்பது எனக்கு தெரியாது என்றால் தெரியும்.

4. வருவாய் ஆவணங்கள் படி வாதி துளசி வாங்கியுள்ள பட்டாவிற்கும் வா.சா.ஆ 1 கிரைய ஆவணத்திற்கும் எந்த சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் இருந்து 3 தெரு தள்ளியிருப்பதால் எனக்கு வழக்கு விவரங்கள் தெரியாது என்றாலும் நான் வாதிக்காக பவ்வியப்பட்டு பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ 1 ஆவணத்தில் வெங்கடேசனின் பாட்டி சொத்தை காட்டிவிட்டு சொத்தின் புல எண்ணை தவறாக காட்டியுள்ளார்கள் என்றால் இல்லை. வா.சா.ஆ 1 ஆவணத்தில் சொல்லியுள்ள நான்கமால்கள் வெங்கடேசனுக்கு சொந்தமான இடத்திற்குரியது என்றாலும் குப்பையா செட்டியின் இடத்திற்குரியது இல்லை என்றாலும் பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்க வேண்டி சொத்து விவரங்கள் பொய்யாக காட்டப்பட்டு ஆவணங்கள் தயார் செய்துள்ளது என்றாலும் சரியல்ல.

5. வாதி எந்த காலத்திலும் வழக்கு சொத்தில் அனுபவத்தில் இல்லை என்றாலும் பிரதிவாதிகள் அவர்களது தாத்தா பாட்டி காலத்தில் இருந்தே அனுபவித்து வரும் சொத்து என்றாலும் இல்லை. வாதி கிரையம் வாங்கியுள்ளார். வெங்கடேசனின் பாட்டி உன்னாமலையம்மாள் 1963லேயே ஏகாம்பர முதலியாரிடமிருந்து கிரையம் பெற்று அவர்தான் அனுபவித்து வருகிறார் என்றாலும் சரியல்ல. குப்பையா செட்டி பெயரில் பட்டா இருப்பதால்தான் வாங்கினார்கள். குப்பையா செட்டி பெயரில் பட்டா உள்ள சொத்து தாவா சொத்தே இல்லை என்றால் சரியல்ல. நான் வாதிக்கு பவ்வியப்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)